வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம்

ஸ்தாபகம் வருஷம் (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 3

புத்- அஅ] நள வருஷம் தை மீ உக - உ வெள்ளிக்கிழமை 11-2-1977) [இல: ருச

# திருக்காளத்தியும் திருக்கேதீச்சரமும்

### மகாசிவராத்திரி

யாழ் இந்துசாலையில் வழமைபோல் சிவராத்திரி விழா வெகு சிறப்பாக நடைபெறும், 'சிவராத்திரி விரத மகிமை' என்னும் பொருள் பற்றி சைவப் புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் உபந்நியாசம் நிகழ்த்துவார். கோப்பாய் திறந்த வெளிச் சாலையிலும் நடைபெறும்.

### இலவசம்

மகாசிவராத்திரி அன்று சமயதீட்சை வைக்கும் நிலையங்களுக்கு சைவ அனுட்டான விதி என்ற புத்தகத்தை யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் இலவசமாக வழங்குகிறார்கள் தேவையானோர் பெற்றுக் கொள்ளுங்கள்.

### திறப்பு விழா

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிட்ட மகா வித்தியாலயம் - கந்தையா மண்டபம் திறப்பு விழா 13-2-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இறைவரித் திணைக்களம் உதவி ஆணையாளர் திரு. க தனபாலசிங்கம் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. — —

## அரும் பணிகள் பலப் பல ஆற்றி வருகின்ற அந்தணச் செல்வர் தாயகம் திரும்ப எண்ணியுள்ளார்



[சைவப்பெரியார் திரு. மு. வைத்தியலிங்கம் 'சிவகௌரி' ஆச்சிரமம், திருக்கேதீச்சரம்]

திருக்காளத்திக்கு - சீகாளத்தி, காளஹஸ்தி என்ற காரணப் பெயர்களும் உண்டு.

சிலந்தி, காளன் என்ற பாம்பு, யானை ஆகிய மூன்றும் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் காளஹஸ்தீஸ்வரரை வணங்கி முத்தி பெற்றமையால் சீகாளத்தி என அன்று தொட்டுப் பெயர் வழங்கி வருகிறது. சீகாளத்திநாதர் திருமேனியில், சிலந்தி யானைத் தந்தம், ஐந்தலை நாகம் முதலிய அடையாளங்களை இன்றும் காணலாம்.

இங்கேயுள்ள இலிங்கம் வாயு லிங்கம். சந்நிதியில் உள்ள திருவிளக்குகளில் ஒரு திருவிளக்கின்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## பெரும் புகழ் படைத்த அருந் தலைவர் மறைவு

### பெரியார் ஜீ. ஜீ. அவர்களுக்கு நாடெங்கும் அநுதாபம்

### அமைச்சனாய், ஆற்றல் மிக்க வீரத் தலைவனாய், அறிஞனாய்த் தொண்டாற்றினர்

தமிழினத்தின் தலைவிதி இவ்வாறுயிற்றே! தக்க தருணத்தில் அரசியற் போக்கை மாற்றிப் புது எழுச்சி கொடுக்க ஆயத்தஞ் செய்து கொண்டு வரும் அருந் தறுவாயில் பெருந் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டனர்.

மலேசியாவில் சுப்போவிலே தமது சொந்த அலுவல்களுக்காகச் சென்ற திரு. பொன்னம்பலம் திடீரென இருதய நோயால் பீடிக்கப்பட்டு வைத்திய நிபுணர்களின் சிகிச்சைக்கும் பயனின்றி சென்ற செவ்வாய்க்கிழமை காலமானார் என்ற செய்தி எல்லோரையும் திகைக்க வைத்துவிட்டது.

அயராமே மயமாகி ஈழமும் தென்னிந்தியாவும் மலேசியா சிங்கப்பூரும் ஏனைய இலங்கையர் வாழ் இடங்களும் கலங்கி நிற்கின்றன.

ஈழத்திலே செவ்வாய் தொடக்கம் ஈமக் கிரியை முடியும் வரையும் மக்கள் துக்க நிலையிலே இருக்கின்றனர் வியாபார நிலையங்கள், பொது மக்கள் இல்லங்கள் சோக வெண்ணங் காங்கித் துயரத்தைக் காட்டுகின்றன.

வியாழன் நள்ளிரவு பூதவுடல் கொழும்பு மாநகரத்தில் திரு. பொன்னம்பலம் அவர்களின் இல்லத்தை அடைந்ததும் நாலா பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கானோர் அநுதாபஞ் செலுத்திய வண்ணமாக இருந்தனர், சட்டத் தரணிகள், நீதிபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலிய முக்கியஸ்தர்கள் கூட்டம் கூட்ட

[வளர்ச்சி 2-ம் பக்கம்]

### சிவராத்திரி

வண்ணை / சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 23 ஆவது ஆண்டு விழா 16-2-77 சிவராத்திரியன்று நடைபெறும். அன்று இரவு 8 மணியளவில் யாழ் / வளாக இந்து நாகரிக பீடத் தலைவர் பிரம்மஸ்ரீ திரு கா. கைலாசநாதக் குருக்கள் (M.A.) தலைமையுரை வழங்குவர். சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவார். வியாகரண சுப்பிரமணிய பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் ஆசியுரை வழங்குவார், நான்கு சாமங்களிலும் விசேட பூசை, திருமுறைப் பண்ணிசை என்பன நடைபெறும்.

...கை மக்களுக்கும் பெரு இழப்பாகும்.

இராஜ இராசேஸ்வரன் தங்கராசா
சட்டத்தரணி
இலங்கைச் சட்டக்கல்லூரிப் பகுதிநேர விரிவுரையாளர்.
உள்ளூராட்சிச் சட்டம்,

## அனைவருக்கும் தலைவர் அவர் தம் வழி காட்டி

### அரசியல் வாதிகளுக்குக் குரு

மூதறிஞர் செல்வநாயகம் தொடக்கம் அமரர் துரையப்பா வரையுள்ள இந்தத் தலைமுறையின் வெவ்வேறு தமிழ் மக்கள் அரசியல் வாதிகள் அனைவருக்கும் தலைவராகவும் வழிகாட்டியாகவும் குருவாகவும் திகழ்ந்து, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும் ஸ்தாபகருமானவரும் முன்னாள் மந்திரியும் ஐ. நா பிரதிநிதியுமானவரும் தலைசிறந்த கிறிமினல் அப்புக்காத்துமானவருமான திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் Q.C. இப்போ எங்கள் மத்தியில் இல்லை.

டொனமூர் கொமிஷன் காலத்தில் அரசியல் தேர்தலை பகிஷ்கரிக்கும் இயக்கத்தை ஆதரித்தும் சுதந்திர இடைக்கும்காலத்தில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை ஆரம்பித்தும் சிங்கள சட்டம் உருவான போது தனித் தமிழ் நாட்டு கோரிக்கையை ஆரம்பித்தும் சிங்கள வருப்பு வாதத்தை எதிர்த்த பெருமை திரு. பொன்னம்பலத்துக்கு உரியது.

பண்டாரநாயகா செல்வநாயகம் ஒப்பந்தத்தில் தமிழுக்குச் சம உரிமை கொடுபடாத படியால் அதனைத் தீவிரமாக எதிர்த்துப்போராடினார்- ஒருகாலம் இலங்கையில் இந்துப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்று பாடுபட்டவர் பின்னர் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுவதற்கு பெரு முயற்சி செய்து வெற்றியும் கண்டார்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தனது இறுதி காலத்தில் சிங்கள தமிழ் ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட்டார்.

### தலைமையை ஏற்றார்

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு திரு செல்வநாயகத்துடனும் திரு. தொண்டமானுடனும் இணைந்து தலைமை தாங்க அழைக்கப்பட்டபோது தமிழர் ஒற்றுமையை வளர்ப்பதற்காக அப் பதவியை ஏற்றார்.

உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தும் தமிழ் அரசியல்வாதிகளுக்கெதிரான வழக்கில் முதன்மையான பங்கெடுத்து வாதாடி அவர்களுக்கு அநீதி விளையா வண்ணம் போராடி நீதி நிலை நாட்டினார்.

இவருடைய மறைவு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹு தை மீ உகூ-உ வெள்ளி

## சிந்தனைக்குச் சிவராத்திரி

'நின்றும் இருந்துங் கிடந்தும் நினை என்றுஞ் சிவன் றாளிணை' என்று திருவாய் மொழியுண்டு. அவ்வாறெக்கணமும் எவ்விடத்தும் நாம் வணங்கும் ஈசனை விசேடமாக வரையறுக்கப்பட்ட வேளையிலே போற்றுதல் பெரும் பயனுடைத்தென்றும் அடியார்கள் அநுபவ வாயிலாகக் கூறியுள்ளனர். வேதசிவாகமங்களும அவற்றின் விரிந்த சாத்திரங்களும் தவநிலை புகட்டும் புராணங்களும் ஒவ்வோர் காலத்தில் வெவ்வேறு விரதங்கள் ஆற்றுவதன் பேற்றினை எடுத்துக் காட்டுகின்றன. அவ்வாறமைந்த விரதங்களில் அதி விசேடமானது சிவராத்திரித் தவம்.

எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி, எரி சுடராய் நின்ற இறைவா போற்றி என்று திருநாவுக்கரசு நாயனார் சொல்லால் விளக்குகின்றனர்; சிவ வழிபாட்டினை 'நோக்கரிய திருமேனி உடைய' நின் மலனை இலிங்க வடிவமாக அகக் கண்ணாலும் புறப் பார்வையாலும் 'சிவன் இரவு' என்று சிறப்புற எடுத்துப் பேசப்படும் புண்ணியப் பொழுதினிலே அடியார்கள் கண்டு கருணை அருளை அநுபவிக்கும் அநுபவமே அநுபவம்.

அம்மையுமாய் அப்பனுமாய் அமையும் அப்பரம்பொருளை ஒப்பிலாச் சோதி மணியை மாசித் திங்கள் இருண்ட பக்கச் சதுர்த்தசியும் திரயோதசியும் சேரும் வேளையில் திருவோண நாளில் கள்ளிரவில் உள்ளத்தால் உன்னி உரையால் உவந்து போற்றி ஒண் மலர் தூவும் உயர் பணி ஆற்றிப் பெறும் பயன் பெரிதினும் பெரிது.

உள் ஒளி விளக்கும் உத்தம வேளை எங்கள் உள்ளம் கபடம் அகந்தை, மமதைஆம் இருட்படலம் நீங்க ஒரு தனி வாய்ப்பை அளிப்பதாகும். திருமாலும் பிரமாவும் தேடொணாத் திருவுரு, தேசுடைச் சோதியாய் எழுந்து அவர்கள் ஆணவ மயக்கினை அகற்றின தென்றால் சிவராத்திரி விரதச் சிறினைச் சொல்லவும் வேண்டுமோ.

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே — அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அவன்";

காண்பார்க்குங் காணொணாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற் — காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்(கு)
ஆதியாய் நின்ற அரன்",

காரைக்கால் அம்மையார் கண்ட காட்சியைக் காணக் கடிது விரதம் காப்போம்.

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

## திருக்காளத்தியும் திருக்கேதீச்சரமும்

சுடர் சதா அசைந்துகொண்டிருக்கும். சிவலிங்கத்திருமேனியில் பச்சைக் கருப்பூரநீரே திருமஞ்சனமாக ஆட்டப்படுகிறது. திருமேனியில் மலர்மாலை முதலியன சாத்தப்படுவதில்லை. சந்நிதியில் திருநீறு கொடுப்பதில்லை. திருமஞ்சன நீரே பிரசாதம்.

இதற்கு மூவர் தேவாரங்களும் உண்டு. பதினோராந் திருமுறையில் நக்கீர தேவ நாயனார் அருளிச் செய்த கயிலை பாதி — காளத்தி பாதித் திருவந்தாதி, போற்றிக் கலிவெண்பா, கண்ணப்பதேவர் திருமறம், கல்லாடதேவ நாயனார் அருளிச்செய்த கண்ணப்ப தேவர் திருமறம் முதலியவைகள் இத் தலத்துக்குரியனவே. தல புராணங்களும் உண்டு. தல விருக்ஷம் கல்லால்.

"கல்லாலி னீழற்கீ ழறங்கண்டானைக்
காளத்தி யானை . . ."

என்பது தேவாரம். திருக்காளத்தியையும் கண்ணப்ப

## ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவகுமார மௌன குரு சுவாமிகள் வரலாறு

(எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன்)

(முன் வளர்ச்சி — 2)

ஸ்ரீ.ல.ஸ்ரீ சுவாமிகள் அவர்கள் ஜனனமாவதற்கு முன் தந்தையார் கந்தசாமிதேவரும தாயார் இருளாயி அம்மையாரும் "குமாராண்டிபரம்பரை" யினராதலால் முருகப்பெருமானை வழிபட்டு, பக்தியும் தருமகுணமும் ஒழுக்கமும் உடையவர்களாக வாழ்ந்து வந்தார்கள், இவர்களுக்கு மக்கட்பேறு இல்லாத குறையால் வருத்தமுற்று ஒவ்வொருகார்த்திகை நட்சத்திரங்தோறும், மதுரையம்பதிக்கு அருகில் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான "திருப்பரங்குன்றம்" போய் முருகப் பெருமானை மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டு பூஜித்து, ஐந்து சிவனடியார்களுக்கு அன்னம் அளித்தப் பின்பு, மதுரைப்பதி ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரப் பெருமானையும் பூஜித்து வருவது வழக்கமாக இருந்தார்கள், ஒருகார்த்திகை நட்சத்திரத்தன்று வழக்கம்போல் திருவரங்குன்றம் முருகப் பெருமானை பூஜித்துக்கொண்டு, ஐந்து சிவனடியார்களுக்கு அன்னமளிக்கும் சமயம ஒரு இளமையான அழகிய சாதுவானவர் அங்கு வந்து தனக்கும் அன்னம் அளிக்கும்படி கேட்டார், அதற்குக் கந்தசாமிதேவர் "நாங்கள் ஐந்து அடியார்களுக்குத் தான் அன்னம் அளிப்பது" என்றார், சாதுவானவர் கந்தசாமிதேவரை நோக்கி எதற்காக ஐந்து பேருக்கு மட்டும் அன்னம் அளிக்கிறீர்கள்? என்று வினவ

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

தேவநாயனாரையும் பிரிக்க முடியாது. ஆதிசங்கராச்சாரிய சுவாமிகளே இதைச் சிவானந்த லஹரியில் குறிப்பிட்டுள்ளார். இத் தலத்துக்குரிய ஆகமம் காரண ஆகமம்:

### புதுப் பொலிவுடன் விளங்கும் அருள் தலம்

பாரத நாட்டுக்குத் திருக் கயிலையும் திருக் காளத்தியும்போல ஈழத்திருநாட்டுக்குத் திருக்கேதீச்சரமும் திருக்கோணேச்சரமும் ஆகும். இரு ஈச்சரங்களும் கோயில்களும் மிகப் பழமை வாய்ந்தன. ஆதியில் கேதுவினால் பூசிக்கப்பெற்றபடியால் திருக்கேதீச்சரம் எனப் பெயர் பெற்றது. விசுவகர்மாவின் புத்திரனான மகாதுவட்டா பூசித்துத் திருப்பணி புரிந்ததனால் மகாதுவட்டபுரம் எனவும் பெயர் பெற்றது. இராவணன் மனைவி மண்டோதரியால் பூசிக்கப்பட்டது. இராமபிரான், அகத்திய முனிவர் போன்ற சிவனடியார்கள் வழிபட்ட தலம். தேவாரப் பாடல்பெற்ற திருத்தலம் ஒரு காலத்தில் அழிவு கொண்டிருந்தது, இப்பொழுது புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. விருக்ஷம் வன்னி ஆகமம் காரணம்,

திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையின் பெருமுயற்சியினால் தற்போது கர்ப்பக்கிருக அர்த்த மண்டபங்கள் கருங் கற்களால் கட்டப்பட்டு அண்மையில் மகாகும்பாபிஷேகமும் சிறப்பாக நடந்தேறியது. இக் கோயிலின் கும்பாபிஷேகமும் நித்திய நைமித்திய காமியக் கிரிகை முறைகளும் காரண ஆகமத்தின்படி செய்வித்த பெருமை, இச் சபையின் காரியதரிசியாய் இருந்து, தமது வாழ்க்கை முழுமையையும் திருக்கோயிற் திருத்தொண்டுக்கென அர்ப்பணஞ் செய்து, நல்லவண்ணம் வாழும் திரு இ நமசிவாயம் அவர்களுக்கே உரியது,

### உள்ளங் கவர்ந்த கள்வன்!

திருக்காளத்தியையும் திருக்கேதீச்சரத்தையும் இணைத்து, ஈழத்துச் சைவமக்கள் சிந்தனையில், என்றும் மறவாமல் இருக்க வைப்பவர், திருக்கேதீச்சர ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ காளஹஸ்தீஸ்வரக் குருக்கள் ஆவர். இவர் திருக்காளத்திக்குப் பண்டுதொட்டுப் பூசனை புரிந்துவரும் ஆதி சைவ அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்து நல்லூரில் இரண்டு வருட காலமும் திருக்கேதீச்சரத்தில் பதினைந்து வருடங்களும் மேற்படி கோவில்களில் பூசை முதலியன சிறப்பாகச் செய்து ஈழத்துச் சைவ மக்களின் உள்ளங் கவர்ந்த கள்வன். ஒருமுறை அவரைக்கொண்டு அர்ச்சனை முதலியன செய்வித்தவர், திரும்பவும அவரையே நாடுவர்; அறநெறியும் செந்தண்மையும் பூண்ட அந்தணர்.

### சிவனடியார்களைப் பேணுதலே சிவபெருமானுக்கு உகந்த செயல்

திருக்கேதீச்சரத்தை விட்டுத் தாய்நாடு செல்லக் கருதியுள்ளார். சைவ மக்கள் தங்கள் நன்றியறிதலைக் காட்ட ஓர் சந்தர்ப்பம் உண்டு. சிவனடியார்களைப் பேணுதலே சிவபெருமானுக்கு உகந்த செயல்.

### கந்தபுராணபடனம்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் 3-2-77 முதல் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லப் பெறுகின்றது. பல அறிஞர்கள் புராண படனத்தில் பங்கு பெறுகின்றார்கள். யாவரும் கேட்டுப் பயன் அடைவார்களாக. (தினமும் மாலை 6-30— 8-30 வரை).

### வரவேற்புபசாரம்

யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் அர்ச்சகர் சிவஸ்ரீ தி சோமாஸ்கந்தசர்மா அவர்கட்கும் நவிண்டில் சிவஸ்ரீ க. தியாகராசக் குருக்களின் புத்திரி சரஸ்வதி அவர்கட்கும் நடைபெற்ற திருமணத்தையொட்டி மேற்படி ஆலய தேவஸ்தான சார்பில் ஞாயிற்றுக்கிழமை ஆலய மன்றில் வரவேற்பளிக்கப்படும்.

### பெரும்புகழ் படைத்த....

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

மாக இறுதி மரியாதை செலுத்தி வந்தனர்.

சனிக்கிழமை காலை பலாலி விமான நிலையத்திலிருந்து மோட்டார் இரத பவனியாகப் பூதவுடல் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்திலும் முற்றவெளியிலும் பொதுமக்கள் அநுதாபத்துக்கு வைக்கப்பட்டுப் பருத்தித்துறையில் இறந்தவரின் குடும்ப இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பின் ஈமக் கிரியைகள் ஞாயிறு நிகழ்ந்தன.

### பெண்களே உங்களுக்கு

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் 4-2-77 வெள்ளிக்கிழமை நடைபெற்ற மரம் நாட்டுவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யிலக வைற் தம்பதிகள் கட்டிட நிதிக்கு உதவி புரிந்ததோடு "பெண்களே உங்களுக்கு" என்னும் நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். இதனை எழுதிய மில்க்வைற் செய்தியாசிரியர் வெளியீட்டுரை வழங்கி நூலைக் கல்லூரி அதிபரிடம் கையளித்தார்,

### மகான் அரவிந்தர்

ஸ்ரீ அரவிந்த ஆச்சிரம அன்பர்கள் ஸ்ரீ பண்டிதர் அவர்களும் செல்வி வசந்தினு அவர்களும் 9-2-77 யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த நினைவு மலராக எழுதப்பெற்ற இந் நூலை மிலக்வைற தொழிலதிபர் திரு. க கனகராசா அவர்கள் இலவசமாக வெளியிட்டுள்ளார்.

### மாபாவிகள் யார்?

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இலரேயாயின், பாவம் செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவராத்திரி வழிபாடு

மகா சிவராத்திரி வழிபாடு திருவருளை முன்னிட்டு வழமைபோல யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் நிகழும் மாசி மீ 5-ஆம் திகதி [16-2-77] புதன்கிழமை சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கொண்டாடப்படும்.

நிகழ்ச்சிகள்.

**நான்கு யாமப் பூசை.**

இரவு 9 மணி சிவபூசா மண்டபத்தில் சிவபூசை

**திருமுறையோதல்**

சபைத் தேவார வகுப்புப் பிள்ளைகளும், யாழ் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகமும்

**புராணபடனம்**

இரவு 2-00 மணி தொடக்கம் 5-00 மணிவரை கந்த புராணம் அடி முடி தேடு படலம்.

மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர். — க. சிற்றம்பலம். கௌரவ செயலாளர்.
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 8-2-7.

## ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுரு

( 2 ஆம் பக்கத்து வளர்ச்சி )

சுவாமி அடியேனுக்கு குழந்தைப் பேறு இல்லாததால் அக்குறையை நீக்க ஒரு ஜோதிடர் அவ்விதம் சொன்ன படி செய்து வருகிறேன்" என்றனர், அவ்விளஞ்சாது வானவர் உமக்குக் குழந்தை வேண்டுமானல் இனி மேற்கொண்டு முருகனுடைய ஆறுமுகத்திற்கும் அன்னம் அளிப்பது போன்று, ஆறு அடியார்களுக்கு அன்னம் அளித்தால் ஆறுமுகனைப்போன்ற குழந்தை பிறக்கும்" என்று கூறிப்புன்முறுவலுடன் சிரித்துக் கொண்டே போய்விட்டார், அது முதற் கொண்டு இவர்கள் கார்த்திகை நட்சத்திரந்தோறும், திருப்பரங்குன்றம் சென்று ஆறு சிவனடியார்களுக்கு அன்னம் அளித்தும், முருகப்பெருமானைப் பூஜித்தும் வந்தார்கள். இப்படி ஓராண்டு சென்றது, ஆடிமாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று ஆறு அடியார்களுக்கு அன்னம் அளித்துக்கொண்டிருக்கும் பொழுது முன்பு கண்ட இளமை சாதுவானவர் அங்குவந்து பார்த்து ஆனந்தமுடன் "நீங்கள் முன்பு ஆறு ஜென்மங்களில் முருகனைப் போன்ற குழந்தை பெறம்வண்டும் என்று தவம் செய்திருக்கின்றீர்கள், ஆகையால் இனி முருகன் பிறப்பான, ஆனல் நீங்கள் வளர்த்து ஆனந்திக்கப் புண்ணியம் இல்லையே, என் செய்வது" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டார்,

கந்தசாமித்தேவரும் மனைவி இருளாயி அம்மையும் இளஞ்சாதுவின் அருள் வாக்கைக் கேட்டுக் கொண்டு ஒருவகையில் இன்பமும், ஒருவகையில் துன்பமுமாக ஊர் வந்து சேர்ந்தார்கள், வழக்கம் போல முருகப்பெருமானை பூஜித்தும் ஆறு சிவனடியார்களுக்கு அன்னம் அளித்தும் வந்தார்கள் இருளாயி அம்மையாருக்குக் கர்ப்பம் ஏற்பட்டுப் பின், கிலக ஆண்டு ஆனித்திங்கள் 1908 விசாக நட்சத்திரத்தில் வியாழக்கிழமை இரவு சிவபெருமானது திருவருளால் நல்ல சுபதினத்தில் முருகன் அம்சமாக ஒரு ஆண் குழந்தை ஜனனமாகியது

கந்தசாமி தேவரும் மனைவி இருளாயி அம்மையாரும் ஆண் குழந்தை பிறந்துள்ளதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து எல்லோருக்கும் பழம் சர்க்கரை வழங்கினார்கள். சுற்றுவட்டாரமக்களும் இச்செய்தியைக் கேட்டு சந்தோஷத்துடன் குழந்தையை வந்து பார்த்தனர்,

(வளரும்)

## அடைவு நகை ஏலவிற்பனவு

பருத்தித்துறை அம்பனை வடலிப்பாதியில் இருக்கும் ஸ்ரீமதி நா. சிவப்பிரகாசம் அவர்களுடைய 1972-ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம் 1974-ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீளாத நகைகள் யாவும் 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 16-ம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் மேற்படியாளரின் கடையில் வைத்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
ஏலவிற்பனையாளரும்
விலமதிப்பாளரும்
சந்நிதிவேல்
பருத்தித்துறை
31.1.77 — 108 4.11.2.17

## இந்து சமயமும் வாழ்க்கையும்

[ திரு. ந. சோமசுந்தரம் இருபாலை ]

( முன்வளர்ச்சி — 5 )

இறைவனது தன்மை இப்படிப் பட்டது தான் என்றும் இன்ன இன்ன வழிகளாலே தான் அடையலாமென்றும் அவன் யார் யாருக்கு எப்படி எப்படி அருள் பாலிப்பானென்றும் எவராலும் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. யார் யார் எந்தெந்தப் பக்குவ நிலையில் இருக்கின்றார் என்றும், யார் யாரை எப்படிப் பக்குவப் படுத்துவதென்றும் யார் யாருக்கு எப்படி யெப்படி அருள் செய்ய வேண்டுமென்பதையும் அவன் ஒருவனே அறிவான், அவனுடைய அருள் வழங்கும் முறைமையை எவராலும் உணர்ந்துகொள்ள முடியாது.

"பொன்னும் மெய்ப்
பொருளுந் தருவானைப்
போகமுந்திருவும்
புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப்
பொறுப்பானைப் பிழை
யெல்லாந் தவிரப்
பணிப்பானை
இன்னதன்மையன் என்று
அறிவொண்ணு
எம்மானை எளிவந்த
பிரானை
அன்னம் வைகும் வயற்பழ
னித்தணி ஆரூரானை
மறக்கலு மாமே"
— சுந்தரர்

பொதுவாகச் சரியை கிரியை, யோகம், ஞானம் என்று நான்கு பகுப்புகளும் இன்னோரன்ன பிறவும் உரைக்கப்பட்டிருப்பதும் இறைவனது அருள் பெருந்திறம் சொல்லித் சிந்தித்து உணர முடியா ததொன்றாகும். அருள் பெற்று உணரமுடியுமேயன்றி வேறு எவ்வகையாலும் அறியமுடியாது. ஆனல் இஃது இப்படி இருக்கிறதேயென்று நாம் மனச் சோரத் தேவையில்லை: ஏனெனில் நம்முன்னோர்கள் பல நடைமுறைகளில் நின்று இறைவனது தன்மைகளையும், இறைவனையும் கண்டு அறிந்திருக்கிறார்கள்,

சிவலோகம் என்பது என்ன? இஃதாவது அன்பை எடுத்துக் கொள்வோம். அது ஒரு உயர்ந்த தன்மை இந்தத் தன்மையில் எல்லையற்று மிளிரும் ஒருவனது உடல், உண்மை, உயிரெல்லாம் அன்பு மயமாகின்றது, இந்நிலையில் அவன் அன்புமயம் ஆகின்றான். அப்போது அவனுக்குப் புலப்படுவதெல்லாம் அன்பு ஒன்றே. அப்போது அவன் சிவலோகத்தில் இருக்கின்றான் என்றும் சிவத்துடன் கலந்துறைகின்றானென்றும் சொல்லப்படும். இதற்தான் நாம் (சிவம்-அன்பு) சிவமயம் என்கின்றோம். எல்லாம் அன்புமயமாக இருக்கிறதென்கிறோம். அன்பின் விரிவே ஆன்மாக்களுக்கும் ஆன்மாக்கள் கன்ம வினைக்கீடாக அனுபவத்திற்குத் தரப்பட்டுள்ள தனு, கரண, புவன போகங்கள் எல்லாமாகும். இவை இவ்வென்று நுணுகி ஆராய்ந்து பார்ப்பின் அன்பின் வடிவமாய் தோய்ந்திருத்தலை அறியலாகும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவது ஆருமறி

## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
இல. ஈடு 89

1. அப்பாப்பிள்ளை இராசேந்திரமும் பெண்
2. சரஸ்வதியும். இருவரும் மல்லாகம்

எதிராக — வாதிகள்

சினி திருமேனி சுன்னுகம் — பிரதிவாதி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 10ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் குறித்த ஆதனவிடமாக விருந்து என்னுல பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிகளுக்கு ரூபா 6733/- வும் மேலும் ரூபா 4000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1974ம் ஆண்டு மார்கழி மாதம் 12ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1976ம் ஆண்டு சித்திரை மாதம் 2ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான, வருடமொன்றுக்கு ரூபா நூற்றுக்கு 5வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 75.20 இதில் நடைபெற செலவு ரூபா 5.4 97½ நடைபெறவேண்டிய செலவு ரூபா 133 02½ மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 106 25 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற் கோயிற்பற்று சுன்னுகம் இறை ஐயன் குடியிருப்பும் தம்பிரான் கடலும் கலைப் பரப்பு இரண்டரையும் வானபயிரும் வீடும், இந்த நிலப்பரப்பு இரண்டரைக்கும் எல்லை கிழக்கு தெரு வடக்கும் மேற்கும் சினியப்புக்கணபதிக்குரிய ஆதனம் தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைப்படி இதடங்கலும் இன்னும் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அதற்குரிய பங்கும் நாலரையடி அகல வழிவாய்க்காலுரித்தும்.

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்,
கொமிஷன் விலமதிப்பாளரும்
தங்கவேல் ஆலயம்,
சந்நிதி வேல,
பருத்தித்துறை 1-2-77 — 109. 4-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தை வளஞ்செய்ய நீரைத் தேக்குவோம்·

## நாவலர் நவிலட்டும் ?



பக்தர் : என்னமான்...? சிவராத்திரி என்றதும் அதிகமானோர் கூத்துப் பார்த்தும், படம் பார்த்தும் கண் விழிக்கமுந்துதுகளே! சரியா?

சித்தர் : விதிமுறைக்கு இலை பாவம்! இடித்து விளக்குவாரும் அருகி வருகின்றனர்? நாவலர் திரையில் வருவராம்! இனி அவராவது, தூக்கநிலையிலுள்ளோரை எழுப்பட்டும்!

"நாயன்மார் - நாதன்"

---

கிலார்
அன்பே சிவமாவது ஆருமறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

இவ்வாறு திருமூலநாயனர் சொல்லுகின்றூர், இப்படிப்பட்ட அன்பைப்பற்றி ஒவ்வொரு மனிதனும் ஆராயக் கடமைப்பட்டுள்ளான்.

உலகத்தில் இருவகைப் பொருள்கள் உள்ளன. ஒன்று காட்சிப்பொருள் (Precebt) மற்றது கருத்துப் பொருள் (Concept) காட்சிப் பொருள் தூலக்கண்ணுகிய புறக்கண்ணுக்குத் தெரியக் கூடியது; கருத்துப் பொருள் அகக் கண்ணுகிய உணர்வால் மட்டும் உணரக்கூடியது: அவ்வகையிலே சேர்ந்தவை தான் கோபம், பொறுமை, வஞ்சகம்; தியாகம், ஆசை அன்பு முதலியன. நாம் ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் அதற்கு இன்ன, இன்ன தன்மைகள் இருக்கின்றன என்று அவற்றின் இயல்புகளை விளக்கமுடியும், உதாரணமாக காட்சிப் பொருளாகிய தண்ணீரை எடுத்துக் கொண்டால் இது திரவப்பொருள், குளிர்ச்சி பொருந்தியது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்று இவ்வாறுகப் பல வகையில் சொல்லிக் கொண்டு செல்லலாம். அதுபோல் அன்புக்கு என்ன தன்மைகள் உண்டு. அவற்றுல் என்ன பயன் என்றெல்லாம் நாம் காண வேண்டாமா? (வரும்)

## யாழ். வைத்திய நிலைய வைரவர் திரு உலா

யாழ். அரசினர் வைத்தியநிலைய வளவில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீசிவஞான வைரவசுவாமி கோயிலில் சிவராத்திரி வழிபாடு வழமைபோல நிகழும். அன்று இரவு வைரவப் பெருமான் திருவீதி உலாக் காட்சி யருள்வர். பஜனை, சொற்பொழிவு ஆகியனவும் நிகழ சைவ மகா சபையினர் ஒழுங்கு செய்துள்ளனர்,

x x x

நல்லைச் சிவன் ஆலயத்திலும், நல்லை ஆதீனத்திலும் சிவராத்திரி விழாச் சிறப்புநிகழ்ச்சிகள் உண்டு.

x x x

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் ஆலயத்திலும் - அரியாலை கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோயிலிலும் சிவராத்திரி விழாச் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

x x x

வட்டுமேற்கு உறவினர் ஐக்கிய நன்மை விருத்திச் சங்கத்தினர் மகா சிவராத்திரி விழாவை வட்டுமேற்கு கார்த்திகேய வித்தியாலயத்தில் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

### THOUGHTS TO BE TREASURED

தினைத்தனை பொன் சிவஞானிக்கு ஈந்தால்
பலமுத்தி சித்தி பரபோகமும் தரும்,
நிலைத்தனை பொன்னை நின் மூடர்க்கு ஈந்தால்
பலமும் அற்றே பரபோகமும் குன்றுமே.

If one makes a small gift, even as small as a sesame seed to a Siva Gnani, it will result in the attainment of prosperity, emancipation from bondage and the enjoyment of Supreme Bliss. But even heaps of Gold as large as the earth made to Godless infidels yield negative results and end in loss of happiness.

Hindu Organ

Friday, February 11, 1977

## Bitter Blow

When that incomparable leader, that peerless patriot, Sir Ponnambalam Ramanathan passed away the prospects of a worthy successor filling up the breach in the immediate future had not been bright at all. But the loftiness of the service of the past leadership had been such that providential blessing was readily forthcoming. And there appeared in the political arena a star that soon began to spread its radiance. A young man of marked enthusiasm soon began to capture the attention of the people who were searching for some one to take up the thread from where it was left by the Great Ramanathan. And within a few years, as if by magic, the fame of this ambitious youth — G. G. Ponnambalam had become to be recognized.

Brilliance at the Bar by itself cannot bring about political leadership. The inner urge to serve the people must be there. Opportunity to lead the people was an open invitation to the vigorous G. G. to galvanize his talents into patriotic activity.

The period of thirteen years since the calling off of the boycott of the legislature in 1933 was the hey day of the Ponnambalam pattern of political campaign. If earlier the silver tongued orator Sir Ramanathan made his efforts effective by the power of speech, later also the same weapon could be wielded to such purpose.

Wizardry of words became a powerful appliance that enabled G. G. win applause and achievement everywhere. The agitation for political emancipation had thus taken definite shape under his leadership. As a pundit of political science be boldly propounded that astounding fifty-fifty theory before a Royal Commission though unsuccessfully but the trend of his thought was not dismissed as fantastic by the Commissioners.

The born fighter G. G. however, showed prowess of practical statesmanship when as Minister of State he formulated several schemes for industrial expansion. As a man of letters, G. G. faithfully interpreted the dreams of his illustrious predecessor, Sir Ramanathan and championed for a University in the North and that to be in accordance with Hindu Culture.

Here was a man in whom the elements were so mixed that the people would always acclaim him as a their hero. Those whom the people love the angels must spare; but Providence has its own Administration with which mortals cannot quarrel. It is a bitter blow.

## MAHASIVARATRI

BY V. SIVASAMY

Every religion has its festivals and vratas meant to be celebrated or observed for the purification of the soul from within and without and for the realization of the Supreme Being by whichever name He is called by His bhaktas. The Hindus have several festivals and vratas right round the year in every month. Of these, Mahasivaratri is unique especially for the Saivites. Mahasivaratri means the Great Night of the Lord Siva, the Supreme God of Saivism.

Maha Sivaratri usually falls on the 14th day of the dark half of the month Masi (Feb March) This is a very important Vrata in honour of Siva. Siva means great happiness or auspiciousness. Man has always tried to visualize the Supreme Being in the best possible form wherever he lived. This Vrata may be connected with some seasonal or climatic change in very remote times. But later it has assumed great religious significance.

There are several legends and stories enumerated especially in the Puranas in Sanskrit and Tamil regarding the greatness of this vrata. One of the most popular stories relates to the great cosmic light Yotirupa of Siva. Both Brahma the God of creation and Visnu the God of protection among the Trimurtis were unable to reach either the top or bottom of this wondrous Jyoti. The story goes on to say that after the end of a Kalpa, Visnu raised the earth from the chaos and created Brahma so that the latter could function as the God of creation. But both of them became arrogant and fought with each other to decide as to who would be the Supreme Being. There was no victory for either of them. At last Lord Siva assumed the form of an unsurpassed cosmic light and appeared between the two and said that he who could reach either the top or the bottom of that Jyoti would be the winner. Both of them took up the challenge. Brahma went up in the high heavens to get at the top of that Jyoti and Vishnu went down the nether world to get at the bottom of that Jyoti. But they couldn't get at the top or bottom of that Jyoti. In vain, they exhausted their energies and returned to the original place, surrendering themselves to the Sacred feet of Siva who took pity on them and manifested Himself before them. This took place on the great Sivaratri. The symbolism behind the story is very significant. Man being fettered in the Malas or arrogance cannot realize the Supreme Being. But God on the other hand redeems him who surrenders himself to Him.

It is also said that besides the Sivaratri, Siva appears in the Jyoti form during the day of the Karthikai deepam. Man in various parts of the world has tried to represent God as the Great Light transcending the human limitations. various devotees of the different religions have referred to this aspect many a time in their sacred books and devotional literatures.

Sivaratri day is observed usually in the Siva temples. The great temple of Siva at Thiruvannamalai attracts large crowds of people during this time. In Sri Lanka, Thirukketeesvaram and Thirukkonesvaram attract crowds of devotees. The God Siva is worshipped usually in the linga form. On this day, the devotees fast during the day time and keep awake during the whole night. They pray, meditate, sing and listen to speeches recounting the greatness of Siva and this vrata. It is also said that if one cannot observe other vratas, he could still observe this vrata and realize the God. A hunter who accidentally performed a Bilva puja during this night is said to have attained salvation. This is related to emphasize that even the worst of the sinners could realize his salvation at the last moment provided he surrenders himself to God who as Antarjyoti resides in the heart of each being.

The worship of Linga harks back to hoary antiquity. Recent archaeological excavations in West Asia and the Indus valley have unearthed ancient lingas. This worship was prevalent in many parts of the ancient world. In India, specimens of Llingas are found in Tamilnadu also. of these, the Linga from Gudimallam is an important one. This is dated to about the second century B. C. Various forms of Linga have been discovered during the last 100 years. With the development of the Bhabti movement in Tamilnadu, the Linga worship assumed greater significance. The Saiva Sairt Thirunavukkarasar has conveyed some of the most sublime thoughts in one of his sacred songs as follows; 'visualizing my body as the temple, the recalcitrant mind as the servant subdued), truth as the purifier, the precious heart as the Linga, I have performed my worship to the Lord Siva with the abundance of devotion as the ghee and milk used for His ceremonial bathing".

In Sri Lanka too Linga worship was prevalent from ancient times. The ancient Linga found at Thirukketeesvara is an important one. There are several Lingas of different times in many of the Siva temples of Sri Lanka. Various versions of the Sivaratri Puranams written in Tamil are read and explained in the temples on this day. It is interesting to note that about three or more versions of such Puranams were written in Jaffna, in late medieval times.

## PUBLIC AUCTION

The unredeemed articles which were pawned with Mrs N. Sivapiragasam of Vadalipathy, Thumpalay, Pt Pedro between 1st Jan 971 and 31st Dec 1974 will be sold by Public Auction on Saturday the 16th day of April 1977 at 9 a. m. at the above address by me.

**K. Muttukumaru Iyer**
Public Auctioneer
and Valuer.

Senthivel
V. M. Road,
Pt. Pedro, 31-1-77,
S. 4 & 11)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday February 11, 1977.

Editor-in-Chief R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org